


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 246 | சனிக்கிழமை 30 ஜூலை 2022 | ஆடி 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

சீனக்கப்பலின் வருகையால்

# இலங்கையில் வல்லரசுகள் நேரடி மோதல்!

**கொழும்பு, ஜூலை 30**

**சீனாவின் விஞ்ஞான ஆய்வுக்கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருகை தரவுள்ள நிலையில், இந்தக் கப்பலின் வருகைக்கு இந்தியாவின் பாதுகாப்புத் துறை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று சீனாவும் பதிலடி கொடுத்துள்ளது.** 11 ➤



## தொண்டைமானாறில் மீன்கள் மர்மச் சாவு

யாழ்., ஜூலை 30

தொண்டைமானாறு நன்னீரேரிப் பகுதியில் 500 கிலோக்கும் அதிகமான மீன்கள் நேற்று மர்மமான முறையில் இறந்து மிதந்தமை அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீன்கள் ஏன் 10 ➤

அரச அராஜகம் உச்சம்

## சோசலிஷக் கட்சியை தடைசெய்யத் திட்டம்

திரைமறைவில் உயர்மட்டப் பேச்சு
கொழும்பு ஊடகங்கள் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 30

மக்கள் போராட்டத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு அடக்குமுறை உத்திகளைப் பயன்படுத்தி வரும் நிலையில், முன்னிலை சோசலிஷக் 04 ➤

## 10,000 தொன் ம.எண்ணெய் இந்தியா வழங்கச் சம்மதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

10 ஆயிரம் மெற்றிக்தொன் மண்ணெண்ணெயை போர்க்கால அடிப்படையில் வழங்குவதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வரலாறு காணாத எரிபொருள் நெருக்கடி நிலவுகின்றது. பெற்றோல், டீசல் என்பன அவ்வப்போது கிடைத்தாலும் மண்ணெண்ணெய் கிடைப்பது அரிதிலும் அரிதான 10 ➤

## நாணய நிதியத்துடனான பேச்சில் முன்னேற்றமாம்

ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களின் உயர் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைக்குப் புதிதாக எந்த உதவிகளையும் வழங்கத் திட்டமில்லை என்று உலக வங்கி அறிவித்துள்ள நிலையில் இந்தத் தகவலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- 11 ➤

வடக்கின்

## புதிய ஆளுநர் சுவாமிநாதன்?

யாழ்., ஜூலை 30

வடக்கின் புதிய ஆளுநராக டி.எம்.சுவாமிநாதன் நியமிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் ஆளுநர் மாற்றங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், கட்சியை வளர்ப்பதற்காக ஆளுநர் பதவிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை அமர்த்துவதற்கான யோசனைகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அவரின் நெருங்கிய தரப்புகள் முன்வைத்துள்ளன.

அந்த வகையில் ஐக்கிய தேசியக் 04 ➤

## அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடுகிறது அரசாங்கம்

எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசம்



கொழும்பு, ஜூலை 30

நாட்டு மக்களுக்கு வாழ்வதுகூட பிரச்சினையாகியுள்ள இந்தத் தருணத்தில், அரசியல் சூதாட்டத்தில் தற்போதைய அரசு ஈடுபட்டு வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர் 10 ➤

## சர்வகட்சி அரசமைக்க பேச்சுக்கு வாருங்கள்!

அனைத்து எம்.பிக்களுக்கும் ஜனாதிபதி ரணில் கடிதம்



கொழும்பு, ஜூலை 30

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு முன்வர வேண்டும் என்று அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில்.

நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக 10 ➤

## நல்லூர் திருவிழாவில் 'மாஸ்க்' கட்டாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர்த் திருவிழாக் காலத்தில் பக்தர்கள் கட்டாயம் 'மாஸ்க்' அணியவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது: 11 ➤

இலங்கை வரலாற்றில்

## இந்த மாதத்திலேயே உச்சப் பணவீக்கம்!

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் வரலாற்றில் இந்த மாதத்திலேயே உச்சநிலையில் பணவீக்கம் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக் 04 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்களின் குரலை கைது வேட்டையால் நசுக்காதே!

## வடக்கு- கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள்

மன்னார், ஜூலை 30

**காலிமுகத்திடல் அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் மற்றும் அவர்கள் மீது தற்போது மேற்கொள்ளப்படுகின்ற கைது நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சிவில் அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டன.**




### யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக காலிமுகத்திடல் அறவழிப் போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையைக் கண்டித்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்களை கைதுசெய்வதை நிறுத்துக, தடுத்து வைக்கப்பட்ட போராட்டக்காரர்களை விடுவிக்க வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### மன்னார்

காலிமுகத்திடல் அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறைகளைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலகம் முன் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முழுநாடும் ஜனநாயக ஆட்சி மாற்றத்துக்காகக் காத்திருக்கிறது. ஆட்சிமாற்றத்துக்காக அமைதி வழிப் போராட்டத்தை மேற்கொள்வோரின் குரலை நசுக்குவது சந்தர்ப்பவாதமாகும். போராட்டக்காரர்களைத் தாக்குவது மற்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி இடம்பெறும் கைதுகளை உடன் நிறுத்து. வன்முறையான ஜனநாயக விரோதமான நடவடிக்கைகள் மூலம் நாட்டை இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்ல இடமளிக்காதே. மக்களுக்கு அரசமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் மீறுதலை உடன் நிறுத்து. ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் உறுதிப்படுத்து போன்ற கோரிக்கைகளை வெளிப்படுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.




### மட்டக்களப்பு

போராட்டக்காரர்கள் மீது அரசாங்கத்தால் கட்டவிழ்க்கப்பட்டுள்ள கைது அச்சுறுதல்களைக் கண்டித்து சிவில் அமைப்புகள் இணைந்து நேற்று மட்டக்களப்பில் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அமைதியான போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம், கைதுவேட்டையை நிறுத்து, அமைதி வழியில் போராடியவர்களை விடுதலை செய், பேச்சு சுதந்திரம் எமது அடிப்படை உரிமை போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-27,150)

---

# "கியூ ஆர்" நடைமுறையில் பேக்கரிகளுக்கு எரிபொருள்

சாவகச்சேரி, ஜூலை 30

எரிபொருள் விநியோகத்துக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'கியூ ஆர்' குறியீடு மூலம் தென்மராட்சியிலுள்ள வெதுப்பக நிலையங்களுக்கு சீராக எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் தென்மராட்சிப் பிரதேசங்களிலுள்ள பேக்கரி உற்பத்திகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன . அத்துடன் பேக்கரி உற்பத்திப் பொருள்களை விநியோகிக்கும் வாகனங்களுக்கும் எரிபொருள் இல்லாமையால் விநியோகமும் இடம்பெறுவதில்லை என்றும் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டபோது, எரிபொருள் நிலையங்களுக்கு வரும் டீசல் மட்டுப்படுத்தப்பட்டு வாகனங்களுக்கு விநியோகிக்க வேண்டியுள்ளது. எனினும் வெதுப்பக நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் விநியோகம் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தற்போது "கியூ ஆர்" குறியீடு மூலம் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதால் பேக்கரிகளுக்கும், பேக்கரி உற்பத்திப் பொருள்களை விநியோகிக்கும் வாகனங்களுக்கும் தேவையான அளவு டீசல் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

---

# பாடசாலை முன்னாள் அதிபர் கழுத்தறுத்துப் படுகொலை

கொழும்பு, ஜூலை 30

பாடசாலை முன்னாள் அதிபரொருவர் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொடூர சம்பவம் பலாங்கொடைப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. ஆறு பிள்ளைகளின் தந்தையான அபேரத்ன (வயது 78) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர் வீட்டில் பல வருடங்களாகத் தனிமையில் வசித்து வந்துள்ளார். நேற்றுக் காலை தந்தைக்கு உணவு வழங்குவதற்காக அவரின் மகனொருவர் வீட்டுக்கு வந்துள்ளார். அப்போது தந்தை கழுத்தறுத்துக் கொல்லப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார். இதையடுத்து, அந்த அதிபர் உடனடியாக பலாங்கொட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் பலாங்கொடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-22)

---

# தேர்தல் நடந்தாலே நாட்டுக்கு மீட்சி!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

பொதுத்தேர்தலை நடத்தி, இந்த நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தாத வரையில் பொருளாதாரத்தில் இந்த நாடு மீட்சியடையாது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நிலைவரங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய, உறுதித்தன்மையை ஏற்படுத்தக்கூடிய, முதிர்ச்சியான பார்வையில்லாத இடத்தில், மக்களுடைய கையில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது. தாம் வழங்கிய ஆணையை மக்கள் இல்லாமல் செய்துள்ளனர். இந்த நாடாளுமன்றம் மக்கள் குரலாக வெளிப்படவில்லை. ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் தளமாக இருக்கவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்தாமல் மக்களின் எதிர்ப்பை நிறுத்த முடியாது. தேர்தல் மூலமே நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும். அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்படாமல் எந்த நாடும், அமைப்பும் இலங்கைக்கு உதவ முன்வராது. இதையேதான் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக ஸ்தாபனங்களும் தெரிவிக்கின்றன - என்றார். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## போராட்டமே வாழ்க்கையா?

ராஜபக்சக்கள் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டால் இலங்கைக்கு விடிவு கிடைக்கலாம் என்று மக்கள் நம்பினார்கள். அதனால்தான் ராஜபக்சக்களுக்கு எதிரான போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் தங்களின் தார்மீக ஆதரவை வழங்கினார்கள். இப்போது ராஜபக்சக்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். ஆனால் அவர்களின் எச்சங்களின் ஆதரவுடன்தான் இப்போதைய ஆட்சியை ரணில் விக்கிரமசிங்க நடத்திச் செல்கின்றார். ஒருவகையில் ராஜபக்சக்களின் ஆட்சியின் நீட்சிதான் ரணில்.

அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு இல்லை என்று சர்வதேச 'பிட்ச்' தரப்படுத்தல் முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது. நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்த ரணிலின் ஆட்சியும் உதவப்போவதில்லை என்பதையே இந்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

நாடு எப்போதுமே கொதிநிலையிலேயே இருக்கப்போகின்றது. அதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு. சர்வதேச நாணய நிதியமே ஒரே வழி என்று இலங்கை அரசாங்கம் இருக்கையில் அதுவும் கைக்கு எட்டாமல் போவதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன.

இலங்கை தனது கடன் வழங்குநர்களிடம் கடன் மறுசீரமைப்புக் குறித்துப் பேச்சு நடத்தி இணக்கம் எட்டிய பின்னரே, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட முடியும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை அந்த அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் தெளிவாக மீண்டும் அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு மிகப்பெரிய கடன் வழங்குநரான – கடன் பொறியில் சிக்க வைத்த – சீனாவுடன் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பான பேச்சுக்கள் வெற்றியடைந்தால் மாத்திரமே சர்வதேச நாணய நிதியத்தின் கதவுகள் திறக்கும். ஆனால் சீனா இதுவரையில் எந்தவொரு நாட்டுக்கும் வழங்கிய கடன்களை மறுசீரமைப்பதற்கு இணங்கியதே இல்லை என்பதுதான் யதார்த்தம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், தனது கடனை மீளச் செலுத்துவதற்கு அந்த நாடுகளுக்கு மீண்டும் கடன் வழங்குவதையே சீனா செய்து வருகின்றது. இலங்கை விடயத்திலும் அவ்வாறான போக்கையே சீனா கடைப்பிடிக்கின்றது. சீனாவுடனான கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடிக்காமல், சர்வதேச நாணய நிதியத்தை நாட முடியாது. சீனாவோ, கடன் மறுசீரமைப்புக்கு இணங்கப்போவதில்லை.

இத்தகைய சூழலில், ரணில் அரசாங்கத்துக்கு மேற்குலகம் கைகொடுக்கும் என்று நம்பினால் அதுவும் முட்டாள்தனமே. ரணில் விக்கிரமசிங்க மேற்குலகின் செல்லப்பிள்ளை என்றுதான் இலங்கை மக்களும் நம்பினார்கள். அவரது கடந்த காலச் செயற்பாடுகளும் அப்படித்தான் அமைந்திருந்தன.

எப்போது ராஜபக்சக்களின் தயவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றினாரோ அப்போதே மேற்குலகம், ரணிலை விட்டு வெகுதூரத்துக்குச் சென்று விட்டது.

ரணில் பதவியேற்றவுடன் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது முப்படைப் பலம் பிரயோகிக்கப்பட்டது. இதற்கு மேற்குலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. ரணில் விக்கிரமசிங்கவை மேற்குலகின் தூதுவர்கள் கூட்டாகச் சந்தித்தனர்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க, மேற்குலக நாடுகளின் தூதர்களுடன் சீறிப்பாய்ந்திருந்தார். தனது இராணுவ அடக்குமுறையை நியாயப்படுத்தியிருந்தார். 'உங்கள் நாடுகளில் ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் கைப்பற்றி வைத்திருந்தால் பேசாமல் இருப்பீர்களா?' என்று கேள்விகளை எழுப்பியிருந்தார் ரணில்.

ஆனால் இந்தச் சந்திப்பின்போது ரணிலுக்கு கனதியான பதிலடியும் கொடுக்கப்பட்டிருந்தது. தற்போதைய சூழலில் இலங்கைக்கு உதவும் நிலையில் இருப்பது ஜப்பான் மட்டுமே. அந்த நாட்டின் தூதுவர், ஜனாதிபதி ரணிலிடம், போராட்டக்காரர்களை இராணுவப்பாணியில் அடக்க முற்பட்டால் தமது உதவிகள் எதுவும் கிடைக்காது என்று எச்சரித்திருந்தார்.

ஆக, மேற்குலக நாடுகள் கூட இப்போது ரணிலின் பக்கம் இல்லை. இந்தச் சூழலில் சீனாவைத் தாண்டி சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் பெறமுடியாத சூழல். ரணில் அதிகாரத்துக்கு வருவதை அவ்வளவாக விரும்பியிராத சூழலில், இந்தியாவும் இலங்கைக்கு இனியும் கைகொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.


மீண்டும் எல்லாவற்றுக்கும் திண்டாட்டம்தான்.

இதைத்தாண்டிச் செல்வதற்கு, மக்கள் ஆதரவுடனான அரசாங்கம் அமைவதே பொருத்தமாக இருக்கும். இல்லாவிடின் இன்னும் சில வாரங்களில் மீண்டும் போராட்டம்தான் இலங்கையர்களின் வாழ்க்கையாக இருக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"உங்கள் சொந்த மனதை அறிந்து கொள்வதே எங்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாகும்"

– தப்டன் யெஷே




# வகிபங்கு அறிந்து செயற்படுதல் நன்று!

## அமெரிக்காவுக்கு சீனா சாட்டை

**கொழும்பு, ஜுலை 30**

**இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு எப்பொழுதும் இலங்கையை வழிநடத்தும் கோட்பாட்டை பின்பற்றுவதாக அமைகின்றது. அனைத்து ஒத்துழைப்புத் திட்டங்களும் விஞ்ஞான திட்டமிடல் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை எந்த அரசியல் விடயத்திலும் இணைக்கப்படவில்லை என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாவோ லிஜியன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான சீனாவின் கடன் தொடர்பில் அமெரிக்க சர்வதேச உதவி நிறுவனத்தின் தலைவர் சமந்தா பவர் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கூறுகளான சர்வதேச மூலதனச் சந்தை மற்றும் பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளைக் காட்டிலும் இலங்கைக்கான சீனக் கடன்களின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது.

ஆயினும் சீனா பெரும்பாலும் இலங்கைக்கு குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் நீண்ட கால முதிர்ச்சியுடன் கூடிய முன்னுரிமைக் கடன்களை வழங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்துக்கு அந்தக் கடன்கள் பங்களித்துள்ளதுடன் உறுதியான நன்மைகளையும் அளித்துள்ளன.

ஆனால் அமெரிக்காவின் அண்மைய திடீர் வட்டி வீத உயர்வு மற்றும் இருப்புநிலைக் குறைப்பு ஆகியவற்றின் விளைவாக உலகப் பொருளாதாரம் மற்றும் நிதிச்சந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை போன்ற வளரும் நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு அமெரிக்கா என்ன செய்திருக்கிறது? என்று முதலில் தன்னைத்தானே கேட்க வேண்டும் - என்றார். (ச-இ)

# பொறுப்புக்கூறல் விவகாரம் வலியுறுத்திய பிரிட்டன்

கொழும்பு. ஜுலை 30

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமைகளுக்கு இணங்க செயற்படுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து. இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஹல்டன், பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் உறுதிப்பாட்டுக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதே தமது விருப்பம் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க குறிப்பிட்டதெற்கு, தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தூதுவர் உறுதியளித்தார். (ஒ-இ)

நாளை
31.07.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 15
சுபநேரம் : 09.03 – 10.33
ராகுகாலம்: 04.33 – 06.03

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 மில்லியனுக்கு அதிகமானோர் இன்னமும் பூஸ்டர் பெறவில்லை

## அலட்சியப்படுத்தாது பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 30


நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட 6 மில்லி யனுக்கும் அதிகமானோர் நான்காவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியைப் பெறவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் பிரதம தொற்று நோயியல் நிபுணர், மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. இந்தநிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்படுதல் வேண்டும். அண்மைய நாள்களில் வழமையைவிட அதிகளவு தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு குறைவாகக் காணப்படும். இவர்கள் கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடவேண்டியுள்ளவர்கள்.

பொருளாதார நிதி நெருக்கடி நிலையில் தொற்றுப் பரவல் அதிகரித்தால் நாடு ஆபத்து நிலைக்குள் தள்ளப்பட்டுவிடும். எனவே தற்சமயம் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடின்றி கைவசம் உள்ளநிலையில் மக்கள் அலட்சியப்படுத்தாது விரைந்து பூஸ்டர் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்ளல் நன்று - என்றார். (ச-இ)





# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 12 . 1943



மறைவு 29 . 07 . 2022

## சிவஸ்ரீ வைத்தியநாதஐயர் சுப்பிரமணியக் குருக்கள் (கணேஸ்ஐயா)

கொக்குவில் மஞ்சவனப்பதி பாரம்பரிய குருக்கள் சிவஸ்ரீ வைத்தியநாத ஐயர் சுப்பிரமணியக் குருக்கள் (கணேஸ்ஐயா) அவர்கள் நேற்று (29.07.2022) வெள்ளிக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் சிவஸ்ரீ செல்லத்துரைக்குருக்கள் வைத்தியநாத ஐயர் பார்வதியம்மா அவர்களின் புத்திரனும், அமரர் சிவஸ்ரீ சுப்பிரமணியஐயர் சரஸ்வதியம்மா அவர்களின் மருமகனும், மீனாட்சி அம்மாவின் (துங்கம்மா) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வைத்தியநாத ஐயர் வெங்கடாசலஐயரின் (கோபால் ஐயா) பாசமிகு அண்ணாவும், கௌரி (ஆங்கில ஆசிரியை, சிலாபம்), பவானி, விஜயலட்சுமி (சாந்தி-நீதவான் நீதிமன்றம், பருத்தித்துறை), சரவணபவ சர்மா (ராஜன் - ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கலைவாணி (கனடா), சித்ரா (கொழும்பு), சரஸ்வதி (செல்வி-கனடா), குமரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற உமாசுதசர்மா, பாலச்சந்திரசர்மா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், மயிலப்புலம் கட்டுவன் வான், ஐயனார் ஆலயம்), சோபனா, முருகானந்தக் குருக்கள் (கனடா ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானம்), ராஜகோபாலசர்மா (கணேஸ் ஐயா, செட்டித்தெரு வீரமாகாளி கோவில், கலைமகள் சோதிட நிலையம்), சண்முகரத்தினக்குருக்கள் (சங்கர், வன்கூவர் முருகன் ஆலயம்), நிருபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸ்ரீவைஷ்ணவி, சீனுவாசசர்மா, ஜனார்த்தனசர்மா, சைதன்யா, ஜதுஷா, அட்சயா, ஐஸ்வர்யா, கார்த்திகா, கன்னிகா, மங்களேஷ், மங்களசயானா, மதுரிகா ஆகியோரின் அன்புப் பேரனும், ஷேத்ராவின் பூட்டனும், சத்தியபாமாவின் மைத்துனரும், மயூரநாதசர்மா (நியூசிலாந்து), அகிலநாதசர்மா (கொழும்பு), வைத்தியநாதசர்மா (கொழும்பு) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி யளவில் மஞ்சவனப்பதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 222 6143
077 743 9475 (ராஜன் ஐயா)
077 695 0567 (விஜயலட்சுமி)
077 411 3261 (குமரன் ஐயா)

தகவல்: பிள்ளைகள்


## ஓகஸ்ட் மாதம்

# பாடசாலைகளுக்கு விடுமுறை இல்லை

கொழும்பு, ஜூலை 30

பாடசாலைகளுக்கு ஓகஸ்ட் மாத விடுமுறை வழங்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதன்படி, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நவம்பர் இறுதி வரை விடுமுறையின்றி பாடசாலைகளை நடத்தி விடுபட்ட கற்றல் செயற்பாடுகளை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# 'கியூ ஆர்' மூலம் இன்று எரிபொருள்

சாவகச்சேரி, ஜூலை 30

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் "கியூ ஆர்" குறியீடு மூலம் குறிப்பிடப்பட்ட வாகன இலக்கங்களுக்கு இன்று எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 6,7,8,9,0,1,2, ஆகிய இறுதி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு நேற்றும் இன்றும் என இரு நாள்கள் 'கியூ ஆர்' குறியீடு மூலம் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் நேற்று எரிபொருள் வருவதற்கு தாமதமானதால் இருநாள்களுக்கு வழங்க வேண்டிய குறித்த இறுதி இலக்கங்களையுடைய வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் இன்று இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

### சோசலிஷக்...

கட்சியைத் தடைச் செய்வது தொடர்பில் உயர்மட்ட பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தின் பின்னணியில் முன்னிலை சோசலிஷக் கட்சியின் பங்களிப்பு மிகப் பெருமளவில் இருப்பதாக நம்பப்படும் பின்னணியில், அந்தக் கட்சியைத் தடை செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இவ்வாறான பின்னணியிலேயே முன்னிலை சோசலிஷக் கட்சியின் நுகேகொடையில் உள்ள தலைமை அலுவலகம் நேற்றுக்காலை இருவேறு குழுவினரால் சோதனையிடப்பட்டுள்ளது. இரண்டு குழுக்கள் வருகை தந்து அலுவகத்தை சோதனையிட்டன என்று முன்னிலை சோசலிஷக் கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

ஒருகுழு சிவில் உடையில் இருந்ததாகவும், அவர்களிடம் சோதனைக்கான எந்த உத்தரவுகளும் இருக்கவில்லை எனவும் தெரிவித்த கட்சியின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர், இரண்டாவதாக வந்த குழு மிரிஹானை விஷேட விசாரணைப் பிரிவினர் என அடையாளப்படுத்தியது என்று குறிப்பிட்டார்.

முதலில் வந்த குழுவினர் 'வெள்ளை வானில்' வருகை தந்து சோதனையிட்டதாக புபுது ஜயகொட தெரிவித்தார். முதலில் காலை 7.30 மணிக்கு வந்த குழுவில் பொலிஸ் சீருடையுடன் பொலிஸ் அதிகாரி ஒருவர் இருந்ததுடன் ஏனைய 10க்கும் மேற்பட்டோர் சிவில் உடையில் இருந்தனர் என்றும் அவர் கூறினார்.

சோதனை நடவடிக்கை குறித்து முன்னிலை சோசலிஷக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவ கருத்து வெளியிடுகையில், 'முதலில் சோதனைக்காக வந்தவர்கள் எந்த பொலிஸ் நிலையத்தை சேர்ந்தவர்கள் என வினவிய போதும், பதிலளிக்க மறுத்துவிட்டனர். அவர்களிடம் சோதனை அனுமதிக்கான எந்த உத்தரவும் இருக்கவில்லை.

அவர்கள் சென்றதும் பொலிஸ் சீருடையில் சிலர் வந்தனர். அவர்கள் தங்களை மிரிஹானை பொலிஸ் நிலைய அதிகாரிகள் என அடையாளப்படுத்தினர். அவர்களுக்கு முன்னர் வந்த குழுவினர் தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கவில்லை. சோதனைக்கான நீதிமன்ற உத்தரவில், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவின் பிடியாணைக்கான பெயர் இருந்ததது. வசந்த முதலிகேவின் பிடியாணையை வைத்துக் கொண்டு முன்னிலை சோசலிஷக் கட்சியின் அலுவலகத்துக்கு வருகை தர வேண்டிய அவசியம் இல்லை' - என்றார். (ம)

(இன்னொரு செய்தி உள்ளே)

### புதிய ஆளுநர்...

கட்சியின் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உள்ளடங்களாக ஐவருடைய பெயர்கள் ஆளுநர்களுக்காக பருந்துரைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் கட்சிகளுடன் பேச்சுகள் இடம்பெற்றுவரும் நிலையில் சிலவேளைகளில் ஆளுநர் மாற்றம் பிற்போடப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. (அ-ம-20)

### இந்த...

கப்பட்டுள்ளது. தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 60.8 வீதமாகப் பதிவாகியுள்ளது.

மேலும், உணவுக்கான பணவீக்கம் 90.6 சதவீதமாகவும், போக்குவரத்துக்கான பணவீக்கம் 143.6 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது என்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நிலைமை சீராகும்வரை கடன் வழங்கும் திட்டமில்லை

## உலக வங்கி கைவிரித்தது

**கொழும்பு, ஜூலை 30**
**மோசமான பொருளாதார நிலைமை சரிசெய்யப்பட்டு போதுமான பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கும்வரை இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்கத் தயாரில்லை என உலக வங்கி அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் அதன் தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.
மருந்துகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களுக்கான உணவுகள் போன்றவற்றில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் வறிய மற்றும் நலிந்த நிலையில் உள்ள குடும்பங்களுக்கான நிதியுதவி போன்றவற்றுக்காக கடந்த காலங்களில் உலக வங்கியால் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.
இதில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன் இந்த நிதியுதவி நலிவடைந்தோருக்கு சென்றடைவதை உறுதி செய்வதற்கான மேற்பார்வைகளை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுடன் இணைந்து நெருக்கமாக நாம் பணியாற்றுகின்றோம்.
இதனைத் தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணிப்போம். போதுமான பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை இலங்கை அரசாங்கம் உருவாக்கும்வரை புதிய நிதியுதவி வழங்குவதற்கான திட்டம் இல்லை- என்றுள்ளது. (ச-இ)

## சண்டித்தனத்தில் ஈடுபட்டால் கை,கால்கள் உடைக்கப்படும்

### சனத் நிஷாந்த பூச்சாண்டி



கொழும்பு, ஜூலை 30
அரச கட்டடங்களைக் கைப்பற்றி சண்டித்தனம் செய்ய முனைந்தால் போராட்டக்காரர்களின் கை, கால்கள் உடைக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த.
தென்னிலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அமைதிவழியில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவருக்கும் அனுமதியுண்டு. அதற்கு எந்தத் தடையும் இல்லை.
ஆனால் அரச உடைமைகளை சேதப்படுத்தி இடையூறு விளைவிக்கும் சண்டித்தனச் செயலுக்கு இடமளிக்க முடியாது. ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை போன்ற அரச கட்டடங்களைக் கைப்பற்ற முயன்றால் அவர்களின் கை, கால்களை உடைப்பதைத் தவிர வேறு வழியிருக்காது -என்றார். (ச-இ)

# ‘19’ ஐ விஞ்சும் வகையில் புதிய திருத்தம் விரைவில்!

## பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்தும் வகையில் 22ஆம் திருத்தம் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு 19 ஆம் திருத்தத்தில் கொண்டு வரப்பட்ட விடயங்களையும் அதிலிருந்த பலவீனமான சரத்துக்களை நீக்கி 19ஐ விஞ்சுகின்ற புதிய திருத்தம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. எனினும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி வசமே என நிதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
22ஆவது திருத்தச் சட்டம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
ஆயினும் முன்னைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 22 ஆவது திருத்தத்தில் உப இணைப்புக்கள் சிலவற்றை உள்ளடக்கியுள்ளார். அவை மீண்டும் நிறைவேற்று அதிகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன என விமர்சனங்கள் எழுந்துள்ளன.
தற்போது அரசாங்கம் முழுமையாக மாறியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி முன்வைத்த இணைப்புகளை நீக்கி மீண்டும் 19 ஆம் திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட விடயங்களையும் அதில் இருந்த பலவீனமான சரத்துக்களை நீக்கி புதிய திருத்தம் ஒன்று கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் அனுமதியைப் பெற்ற பின்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடவும் அடுத்த ஏழு நாள்களில் நாடாளுமன்றில் திருத்த வரைவை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
இதுகுறித்து சகல தரப்புகளுடனும் கலந்துரையாடி ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் 19 ஐ விஞ்சுகின்ற வகையில் புதிய அரசியல் அமைப்பு கொண்டு வரப்படவுள்ளது.
அதேவேளை பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்கவேண்டும் என்பதில் மாற்றமில்லை, பாதுகாப்பு அமைச்சு மாற்றப்படவேண்டும் என்றால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும். அதற்கு இப்போது வாய்ப்பில்லை - என்றார். (ச-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காரைநகர் தென்மேற்கு கமக்கார அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் வியாவில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
கூட்டத்தில் காரைநகர் தென்மேற்கு கமக்காரர் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கமக்காரர் அமைப்பின் செயலாளர் க.விக்கினேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-14)

## ஜனாதிபதியின் கொடியை படுக்கை விரிப்பாக்கிய சந்தேகநபர் கைது




கொழும்பு, ஜூலை 30
ஜனாதிபதி மாளிகையை கடந்த ஜூலை 9ஆம் திகதி போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்தபோது ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ கொடியைப் படுக்கை விரிப்பாகப் பயன்படுத்தியவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
குறித்த நபர் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்டுவந்த நிலையில் அவர் பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்துள்ளார். இந்தநிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மஹோற்சவம்

மட்டுவில் மருதடி தான் தோன்றிப் பிள்ளையார் கோயிலின் மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 12 ஆம் திகதி திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (ஒ-14,159)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பெற சபை மறுசீரமைப்பு அவசியம்

## மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு




கொழும்பு, ஜூலை 30
புதுப்பிக்கத்தக்க எரிசக்தியே மின்சாரத்துறைக்கு புத்துயிர் பெறுவதற்கான முன்னோக்கிய வழி. ஆகவே இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:
மின்சார சபையின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் வழங்கல் செயற்பாடுகளை பிரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.
நேற்றுமுன்தினம் மின்துறை [illegible] டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது.
2014 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மின்சார சபை புதிய பெரிய மின் உற்பத்தி நிலையங்கள் எதனையும் ஆரம்பித்து செயற்படுத்தவில்லை.
தற்போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியே மின் துறையை புத்துயிர் பெறுவதற்கான முன்னோக்கி வழி. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் ஒரு திட்டத்துடன் சீரமைப்புகள் செய்யப்படவேண்டும்.
எனினும் இதுபோன்ற திட்டங்களை எளிதாக்குவதற்கான அணுகுமுறை பயங்கரமானது- என்று தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org































# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பயணங்களால் அலைச்சல் உண்டாகும் என்றாலும் ஒரு முயற்சி நிறைவேறும். தேவைகள் பூர்த்தியாகும். பங்குதாரர்களுடன் உண்டான பிரச்சினைகள் முடியும்.

**இடபம்:** பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். வருமானம் கூடும். உறவினர்கள் உங்கள் வீடு தேடி வருவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்

**மிதுனம் :** உற்சாகமாக செயற்பட்டு நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். நிதிநிலை உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

**கடகம்:** உங்கள் கவனக்குறைவால் செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். ஒரு சிலரின் விமர்சனத்துக்கு ஆளாவீர்கள். உங்கள் முயற்சிகளில் எதிர்பார்த்த நன்மையை எட்ட முடியாமல் போகும்.

**சிம்மம்:** பணப்பரிவர்த்தனையில் கவனம் தேவை. வேறு சிந்தனைகள் வேண்டாம். விழிப்புடன் செயற்படுவதால் விரயங்களைத் தவிர்க்க முடியும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**கன்னி:** எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். கடன்களை அடைப்பீர்கள். பழைய முதலீடு ஒன்றிலிருந்து எதிர்பாராத லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயற்பட்டு ஆதாய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை லாபத்தை உண்டாக்கும். புதிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். போராடி சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் திறமையால் ஒரு செயலில் ஆதாயம் காண்பீர்கள். பகைவரால் ஏற்பட்ட சங்கடம் விலகும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். அதிகாரிகள் பாராட்டுவர்.

**தனுசு:** முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். பகைவரால் நெருக்கடி தோன்றும். உதவுவதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் காணாமற் போவர். கவனம் தேவை. உத்தியோகத்தில் எதிர்ப்பு வலுக்கும்.

**மகரம்:** புதிய நண்பர் ஒருவரால் உங்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள். தம்பதியருக்குள் ஏற்பட்ட பிரச்சினை விலகும். மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும்.

**கும்பம்:** மறைமுகத் தொல்லை கொடுத்து வந்தவர்களை கண்டறிந்து விலக்குவீர்கள். பகைவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**மீனம்:** உறவினர்கள் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரத்தில் உங்கள் முயற்சி வெற்றியாகும்.

# இலங்கை முழுவதும் டெங்கு தீவிரம்!

## உலக சுகாதார ஸ்தாபனம் அபாய ஒலி

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான அலுவலகத்தின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அந்தப் பதிவில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர் கள் பாடசாலை மாணவர்களாவர். டெங்கு நோயை பரப்பக்கூடிய ஏடிஸ் நுளம்பு காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் தீவிரமாகத் தாக்குகின்றது.

பாடசாலைகளிலும் வீடுகளிலும் டெங்கு நோய் பரவு வதைத் தடுப்பதற்கான வழி முறைகளைப் பின்பற்றுமாறு பெற்றோர் மற்றும் பொதுமக்களை இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகம் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது. (ம-14,இ)







பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர் வெள்ளோட்டத் திருவிழா பலநூறு பக்தர்களின் பங்கேற்புடன் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் மீட்சி மாற்றத்தை நோக்கி இளையோர் சக்தி வெளிப்படட்டும்!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

நாட்டின் சட்டத்துக்குட்பட்டு அமைதியான முறையில் உரிமைகளை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதியுள்ளது. மாற்றத்தை நோக்கி இளையோர் பயணிக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் அமைப்பை மாற்றவேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் கோரிக்கையாக இருந்தது. அதனை நாமும் ஏற்றுக்கொள்கிறோம்.

நாட்டின் சட்டத்துக்கு அமைவாக அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதியுள்ளது. நாட்டுக்கு தற்போது மாற்றம் ஒன்று தேவை. அதுவே போராட்டக்கள இளையோரினதும் கோரிக்கையாகும்.

நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியுள்ள இந்தத் தருணத்தில் இளையோர் பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வழிவகுக்கவேண்டும். அதற்கான செயற்றிட்டங்களை நாம் தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

பல்திறன்கொண்ட இளையோரை போராட்டக்களத்தில் அவதானித்தேன். நாட்டின் மீட்சிக்கான மாற்றத்தை நோக்கி அவர்களது திறன்கள் வெளிப்பட வேண்டும் - என்றார். (ச-இ)


## கண்ணீர் அஞ்சலி



எமது துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி சுபாசினி உதயராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னன் பாலசிங்கம்

அவர்கள் 27.07.2022 புதன்கிழமை காலமாகியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புவியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த (26.06.2022) அன்று இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் இராசையா தங்கம்மா (ராணி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.07.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் காலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துவாரகா ஸ்ரோர்
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.

குடும்பத்தினர்



## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

### Procurement of 5X13 KVA Solar Panel on Grid System Installation-2022
### NP/20/PFM/PROC/SOL/2022/02

1. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட 13 பாடசாலைகளுக்கு கீழ்வரும் விபரப்படியான பெறுகையினை மேற்கொள்வதற்குத் திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

| Procurement No. | Item | No.of Category Items | Estimated Cost in Mn.Rs. | Bid Security Rs. | Non-Refundable fee Rs. |
|---|---|---|---|---|---|
| NP/20/ PFM/PROC/ SOL/2022/02 | 5x13KVA Solar Panel on grid system Installation | 13 | 26.00 | 260,000 | 5,000 |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப் படும்.
3. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. வழங்குனர்கள் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 5,000/= இலங்கை வங்கியின் "0005932043" இலக்கத்திற்கு வைப்புச்செய்து பற்றுச்சீட்டினை அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 01.08.2022 தொடக்கம் 15.08.2022 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 08.08.2022 காலை 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
6. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக் கேள்விகள் 16.08.2022ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குத் திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரம் உள்ளது.

செ. உதயகுமார்
தலைவர்
மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது

(CR 36833)1/6



# VACANCY

## Post of Tutor-Mentors [On Contract]

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING**
**BACHELOR OF ARTS DEGREE PROGRAMME**
**WALK – IN – INTERVIEW**

Walk – in – Interview will be held for the following post on contract basis for one year for the Centre for Open and Distance learning, University of Jaffna.

**Post of Tutor-Mentor [On Contract - 02 Posts]- Bachelor of Arts Degree Progrmme**

**Place & Time:**
- **Date:** 15.08.2022
- **Time:** 09.00 A.M
- **Venue**: Board Room, Centre for Open and Distance Learning, University of Jaffna, Thirunelvely.

**Requirements:**
- A degree with Class from a recognized University in Bachelor of Arts
- Should have good command in English & Tamil
- Should have Computer Application skills in MS Office, Learning Management System (Moodle), Internet & e-mail & typing skill in English & Tamil.

**Salary:** Rs.56, 800/= [fixed] per month

Interested candidates with required qualification are expected to be present for the interview at the scheduled time with relevant certificates, NIC and the self prepared application.

Registrar
University of Jaffna
29.07.2022



# மரண அறிவித்தல்

பிறப்பு 30 • 06 • 1932



இறப்பு 29 • 07 • 2022

### திருமதி மேரி மாகிறேற் தியாகராஜா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மருதடி வீதி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மாகிறேற் தியாகராஜா நேற்று (29.07.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுறுப்பிள்ளை - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற தம்பு தியாகராஜாவின் அன்பு மனைவியும். றெஜினோல்ட் ராஜகுமார் (லண்டன்). அனற் சசிகலா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும். லிண்டா (லண்டன்). அன்ரனி கிறிஸ்ரி ஜோர்ஜ் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். சாள்ஸ்-ராகினி. சாறா-ஹறிபிரவீன். சபிதா. சங்கீதன் ஆகியோரின் பேர்த்தியும். சாளினி. ஆதேஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.07.2022) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த [illegible] உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


[illegible], மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 899 3671


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 . 03 . 1945



மறைவு 06 . 07 . 2022

### அமரர் சுப்பிரமணியம் கணேசநாதன்

கடந்த 06.07.2022 இயற்கை எய்திய எமது குடும்பத்தலைவரின் மறைவு செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி, இணையம் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.07.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**"கணேச வாசா"**
**தொட்டிலடி,**
**சங்கானை.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 11 . 1933



இறப்பு 27 . 07 . 2022

### திருமதி லலிதா ராசமலர் சர்வேஸ்வரன்

கண்டியைப் பிறப்பிடமாகவும், மிக நீண்ட காலமாக நுணாவில், சாவகச்சேரியையும், சில வருடங்களாகக் கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி. லலிதா ராசமலர் சர்வேஸ்வரன் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (27.07.2022) அன்று மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற P.A.சோமசுந்தரம் - கமலாலில்லி சோமசுந்தரம் அவர்களின் அன்புப் புதல்வியும், திரு.சர்வேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சாமுவேல் செல்வநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், நந்தாவதியின் உடன்பிறவாச் சகோதரியும், கலாநிதி நோயல் விமலேந்திரன் (இளைப்பாறிய அதிபர் - யாழ்ப்பாணக்கல்லூரி மற்றும் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை), மல்கம் குலேந்திரன் (கனடா), வலஸ் றபீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அனோஜா, சாந்தி - மேரியா, நளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோன் நிரோஷன் - லக்ஷ்மிலா, ஜோயல்ஷெகான் - மொறின், தேவகி, ஜனகன் - சிந்து, டெரிக் - ஜெனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெபின் ரெஷோன், றொபின் வொஷோன்,குளோரிட்டா ஜோலா,மாரியா, லூக்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை அன்னாரின் வசிப்பிடமாகிய "ஆராதனை" 27, கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் 01.08.2022 திங்களன்று பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, வட்டுக்கோட்டைத் தென்னிந்தியத் திருச்சபைப் பேராலய சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கலாநிதி. நோயல் விமலேந்திரன் (மகன்)**
**+94772210173**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 20115) 1/6

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் Dr. கதிரேசு தயாளன்

**(வைத்தியக் கலாநிதி)**

**வையத்துள்**
**24.05.1965**

**வானுறைதெய்வத்துள்**
**02.08.2019**

ஆண்டு மூன்று ஆனாலும் - ஆறவில்லை
எமது மனநினைவு - அகலவில்லை நீ
எமது உள்ளங்களில் வாழ்கிறாய்
மறக்க முடியவில்லை உன்னை !

மண்ணுலகில் நாம் அண்ணா என
அழைப்பது கேட்கவில்லையா!
விண்ணுலகில் அமைதியாய் வாழ
வணங்குகிறோம் உன்னை.

**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

யாழ்.மண்ணில் 08 வருட கால நம்பிக்கையை வென்ற

## இந்தியன் செலக்ஷனின் ஆடி மாத

## ஆடித் தள்ளுபடி



இவ்வருடமும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், வைபவங்களுக்கான சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



காலம் : 29.07.2022 முதல் 08.08.2022 வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

இடம்:
**வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
03 . 02 . 1946



ஆண்டவன் அடியில்
29 . 07 . 2022

## திருமதி பாலாம்பிகை ஸ்ரீதரன்

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலாம்பிகை ஸ்ரீதரன் அவர்கள் நேற்று (29.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் சோதிப்பிள்ளை (கொக்குவில்) தம்பதியரின் அன்பு மருமகளும், அருணாசலம் ஸ்ரீதரன் (JP, தீவு முழுவதும் , ஓய்வுபெற்ற பொறியியல் உதவியாளர், தேசிய நீர்வடிகாலமைப்புச் சபை) அவர்களின் அன்பு மனைவியும், தயாளினி (சுருக்கெழுத்தாளர், நீதவான் நீதிமன்றம், சாவகச்சேரி), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), விஜயராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யனந்தினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு, வட மாகாணம்), தயூரன், தரணியா, டிலக்சனா, கருணியா, கார்த்திக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இராஜேஸ்வரி-சர்வேஸ்வரன், கமலாம்பிகை, மகேஸ்வரி-ரவிச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும், கௌசலாதேவி அரியரட்ணம் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் (முன்னாள் அதிபர்)-சர்வேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும், தாரணி-விஷ்ணுகாந்தன், Dr.கோபிசங்கர், ராம்சங்கர் ஆகியோரின் பெரியம்மாவும், ரவிசங்கர் (கனடா), சாமினி (லண்டன்), மாலினி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'அம்பிகைவாசா'**
**கற்பகப்பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே.இல:077 777 0517**
**076 8836 388**

(CS 20126) 1/6

# மரண அறிவித்தல்



## திரு.நடனகனகசபை பாலகிருஷ்ணன்

**(ஓய்வுபெற்ற தொழில் திணைக்கள அதிகாரி-யாழ்ப்பாணம்)**

யாழ். கொழும்புத்துறையினை பிறப்பிடமாகவும், கனடாவினை வசிப்பிடமாகவும் கொண்ட நடனகனகசபை பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த (28.07.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடனகனகசபை மதிவதனநாயகி தம்பதியரின் அன்பு மகனும், திருநாவுக்கரசு பரிமளரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், செந்தூர்ச்செல்வி (செல்வி அக்கா) அவர்களின் அன்புக் கணவரும், அருண் பிரகாஷ், ராம்பிரகாஷ், மைதிலி ஆகியோரின் பாசமிகு அப்பாவும், கீதா, கௌசிகா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷான், கேஷன், அனிகா, ஆத்மன், ஆத்மிகா, அர்ச்சுனன், அஜேய் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் ராமச்சந்திரன் மற்றும் சிவபாலன், பதுமைநிதி, செல்வநிதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமகள், திருஞானசம்பந்தன், சௌந்தரநாயகி, சண்முகநாதன், ஸ்ரீசிவகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யாழ். கொழும்புத்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**யோகர் சுவாமிகள் ஆச்சிரமம் அருகில்**
**94, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**
**தொ.பே.இல:021 221 4992**

# மரண அறிவித்தல்



## தங்கராசா செந்தில்குமரன்

ஏழாலை கிழக்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா செந்தில்குமரன் 27.07.2022 புதன்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தங்கராசா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் தர்மதாசன் விஜயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தனுசாவின் (ஆசிரியை, ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்) அன்புக் கணவரும் தரண்யாவின் பாசமிகு தந்தையும் வினோதினி, லோயினி, தணிகைக்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம், உதயகுமார், சர்மினி, றஜிதா, வனயா, கிரியா, ரமேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகிதரன், கலாரூபன், ஆறுமுகசாமி, நேமிகா ஆகியோரின் அன்புச் சகலனும் பாதுஷன், அபிராமி, ரதன், கீர்த்திகா, உசாந், தீசிதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தாருக்ஷயன், திஷானுயன், ஆருக்ஷா, ஆருட்சயன், திகழினி, ஆர்த்திகன், தன்சிகா, தஸ்வின், வர்னியன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.08.2022 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] தேவாலயம் அருகில்**
**ஏழாலை கிழக்கு,**
**ஏழாலை.**

**077 005 6448**
**077 270 3129**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டைமானாறில்...

இறந்தன? என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்காக துறைசார் அதிகாரிகள் தண்ணீரின் மாதிரியையும், இறந்த மீன்களையும் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றனர். வான்கதவு திறக்கப்பட்டதால் நீரின் சம நிலை பாதிப்படைந்து மீன்கள் இறந்திருக்கலாம் என்று முதல்கட்ட உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. எனினும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## அரசியல்...

பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: அரசியல் சூதாட்டத்தைத் தவிர வேறெதையும் இந்த அரசாங்கம் செய்யவில்லை. எண்ணெய், எரிவாயு, பால்மா, உரம் போன்ற எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு இல்லை. தீர்வுகள் இல்லாத நாட்டுக்கு அரசியல் சூதாட்டம் பதிலாக இருக்கக் கூடாது. இந்த அரசியல் சூதாட்டம் சீரற்ற அரசியல் கலாசாரத்தின் பண்பாகும். இந்த நிலையிலிருந்து விடுபட புதிய அரசே நாட்டுக்கு தேவை. ஒப்பந்தங்களின் மூலம் அன்றி மக்கள் அபிப்பிராயத்தின் ஊடான புதிய மக்கள் ஆணையை அந்த அரசு பெறவேண்டும். 220 இலட்சம் மக்கள் தமது வாழ்க்கையை இழந்துள்ள இந்த வேளையில், அரசியல் தலைகள் மாறுதல், இசை நாற்காலிப் போட்டிகள், அமைச்சர்கள் மாற்றம் என பேரம் பேசும் கலாசாரம் நிலவி வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் இந்த நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தற்போதைய அரசால் முடியவில்லை. அரசு தனது இருப்பைக் காக்கவே முன்னுரிமை அளிக்கின்றது. நாட்டு மக்களின் வாழ்க்கையை உறுதிப்படுத்தல் தொடர்பில் இந்த அரசுக்கு எந்த எண்ணமும் இல்லை. உலக வங்கியின் அதிகாரிகள், 'பிட்ச்' மதிப்பீட்டு நிறுவனத்தினர், சமந்தா பவர் போன்ற பல்வேறு இராஜதந்திரிகள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டில் உறுதித்தன்மை வலுவாக இருக்க வேண்டும் என்றும், பல்வகை பொருளாதாரக் கட்டமைப்பு நடைமுறையில் இருக்க வேண்டும் என்றே குறிப்பிடுகின்றனர். இந்த நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப புதிய மக்கள் ஆணையின் மூலமே முடியும். இதன்படி மகாநாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் கோரும் புதிய மக்கள் ஆணையைப் பெற வேண்டும். இந்த அரசியல் சூதாட்டம் நிறுத்தப்பட வேண்டும். பதவிகளை பரிமாற்றம் செய்வதால் 220 இலட்சம் மக்களின் துயரங்களுக்கும் கண்ணீருக்கும் தீர்வு கிடைக்காது' - என்றார். (அ-ம-22)

## 10,000 தொன்...

விடயமாக மாறிவிட்டது. விவசாயிகள், மீனவர்கள் மண்ணெண்ணெய் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மீன்பிடித் தேவைக்காகவும், விவசாய நடவடிக்கைகளுக்காகவும் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.
இந்தநிலையில்,10 ஆயிரம் மெற்றிக்தொன் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்று கோரி இந்திய அரசாங்கத்திடம் இலங்கை கோரிக்கை விடுத்த நிலையில், அந்தக் கோரிக்கையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. (அ-ம)

## சர்வகட்சி...

ரணில் பொறுப்பேற்றதை அடுத்து, சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பதற்குப் பேச்சுக்களை பல தரப்பினருடனும் முன்னெடுத்து வருகின்றார். ரணில் அமைத்துள்ள தற்போதைய அமைச்சரவைக்குப் பலரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் இதர கட்சிகளையும் உள்ளடக்கி அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுப்பதற்கு ரணில் திட்டமிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என அனைத்து முதன்மைக் கட்சிகளும் ரணிலின் கோரிக்கையை ஏற்பதற்குப் பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ள நிலையில், சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வர வேண்டும் என்று அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்கடிதம்மூலம் கோரியுள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமையை தீர்ப்பதற்காக சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு ரணில் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (அ-ம)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 - 01 - 1991 | விண்ணில் 30 - 07 - 2021



அமரர்
## சூரியகுமார் போல்சுகிர்தன்

மகனே! உருண்டது ஓராண்டு ஆனால் நமக்கு ஒரு நொடி போன்ற
கானல் இயன்றளவு முயன்றுவிட்டு இயற்கை எய்திவிட்டாய்
சீக்கிரமாய்
உன் இறப்பு என்றும் ஒரு சரித்திரம் நம்வாழ்வில்!
அண்ணா! ஒரே கருவிலிருந்து வந்தோம் தாய் தந்தை அன்பில்
ஒருமித்திருந்தோம்
ஆனாலும் நீ முந்திக் கொண்டாய் நாம் பிந்திக் கொண்டோம்.
கண்கள் இமைக்க மறந்து இதயம் துடிக்க மறுத்த தருணம்
உன் மரணம்
அப்பா! என் அன்பை பகிரும் முன்பே
உங்கள் பிரிவு முந்திக்கொண்டது

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
077 654 9602

உங்கள் நினைவுகளுடன்
பெற்றோர்
பிறின்லி ஒலிவியா (மகள்)

---

# காணி விற்பனைக்கு

நீர்வேலி கரந்தன் சந்தியில் இருந்தும்,
பலாலி வீதி ஊரெழு சந்தியில் இருந்தும்
1 km பிரதான கரந்தன் வீதியில் 6 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.
**077 236 7508**


---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 ஆம் நாள் (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 09.10 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுப லக்கினமும் மக நட்சத்திரமும் சிம்ம ராசியும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்



திரு.திருமதி திருகுமரன் டசிகலா தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி
## பகீரதி
அவர்களுக்கு



இறைவன் திருவருள் துணையுடன் "செல்வா பலஸ்சின் ஆம்பலரங்கில்" பூப்புனித நீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, செல்வியை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

இல.25/8, அரசடி ஒழுங்கை,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி.திருகுமரன் டசிகலா குடும்பத்தினர்.
திரு.செல்லத்துரை ராஜேஸ்வரி குடும்பத்தினர்.
திரு.அமிர்தலிங்கம் மனோன்மணி குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் தில்லைநடராஜன்

பிறப்பு : 31.05.1949 - இறப்பு : 21.07.2022

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சிட்னி ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தில்லைநடராஜன் அவர்கள் வியாழக்கிழமை 21.07.2022 அன்று சிவப்பதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சோமசுந்தரம் காலஞ்சென்ற மகேஸ்வரி சோமசுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ராசையா மற்றும் காலஞ்சென்ற சாந்தநாயகி ராசையா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தேவனாகிய அவர்களின் ஆருயிர் கணவரும் ஸ்ரீரங்கராஜன், யமுனராஜன், மதனராஜன், விக்னராஜன், காலஞ்சென்ற வரதராஜன் ஆகியோரின் அருமை அண்ணாவும் பராசக்தி ஸ்ரீரங்கராஜன், தர்ஷினி யமுனராஜன், யோகவதி, மதனராஜன் மற்றும் சிவமதி விக்னராஜன் ஆகியோரின் மைத்துனரும் ராசையா குமாரசுவாமிபிள்ளை, லோகநாயகி ஸ்ரீசக்திவேல் ஆகியோரின் மைத்துனரும் தனலட்சுமி குமாரசாமிபிள்ளை, விநாயகமூர்த்தி, ஸ்ரீசக்திவேல் ஆகியோரின் சகலனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
மைத்துனர், பெறா மக்கள் - 0777 283675

---

# மரண அறிவித்தல்

## பொன்னன் மகாதேவன் (சின்னத்தம்பி)

தோற்றம் : 02.10.1954 மறைவு : 28.07.2022



அச்சுவேலி பத்தமேனி பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் இல.243, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னன் மகாதேவன் (சின்னத்தம்பி) கடந்த (28.07.2022) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீபாஸ்கரதேவி (ஸ்ரீ) அவர்களின் அன்புக் கணவரும், நிமலகன் (லண்டன்), மையூரன் (பிரான்ஸ்), டிலானி (லண்டன்), றிசோனா, ஜயந்தன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், நிஷா (லண்டன்), கௌசி (பிரான்ஸ்), சசிக்குமார் (லண்டன்), அருணன், தனு ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், குண்டுமணி, சிவனடி (கண்டு), தர்மரட்ணம் (காந்தன்) மற்றும் செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகரிதன், யக்டிஸ், டிசாலினி, லதுசிகா, சுருதிகா, ஐஸ்வினி, டர்சினி, அஸ்வித், மிதுசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவர்தம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்பாட்டின் அடிப்படையில் இன்றும் எரிபொருள் விநியோகம்!

## நுணாவில் ஐ.ஓ.சி. உரிமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

மக்களின் நேரவிரயத்தையும், சிரமத்தையும், வீண் அசௌகரியங்களையும் தவிர்க்கும் வகையில், இன்றைய தினம் முன்னறிவிக்கப்பட்ட பிரிவுகளுக்கு எரிபொருள் விநியோகம் வழங்கப்படும் என்று நுணாவிலில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளையதினமும் (இன்றும்) கியூ.ஆர் அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது. அதற்கமைவாக, தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/303 முதல் ஜே/330 வரையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளுக்கும், 0,1,2 வாகன பின்னிலக்கங்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

மேலும், கிராம அலுவலர் பிரிவை உறுதிப்படுத்துவதற்காக குடும்ப அட்டை அல்லது எரிபொருள் நிரப்பு அட்டையை பொதுமக்கள் தம்வசம் வைத்திருக்க வேண்டும் - என்றார். (ம-159-9)

| | | | | |
|---|---|---|---|---|
| ஜே/303 | - | 09.00 | - | 09.30 |
| ஜே/304, 305 | - | 09.30 | - | 10.00 |
| ஜே/306 | - | 10.00 | - | 10 30 |
| ஜே/307, 308 | - | 10.30 | - | 11.00 |
| ஜே/309 | - | 11.00 | - | 11.30 |
| ஜே/310, 311 | - | 11.30 | - | 12.00 |
| ஜே/312, 313 | - | 12.30 | - | 13.00 |
| ஜே/314, 315 | - | 13.30 | - | 14.00 |
| ஜே/316, 317 | - | 14.00 | - | 14.30 |
| ஜே/318, 319 | - | 14.30 | - | 15.00 |
| ஜே/321, 320 | - | 15.00 | - | 15.15 |
| ஜே/323, 324 | - | 15.15 | - | 15.30 |
| ஜே/325, 326 | - | 15.45 | - | 16.00 |
| ஜே/327, 328 | - | 15.45 | - | 16.00 |
| ஜே/329, 330 | - | 16.00 | - | 16.30 |

# சமூகச் செயற்பாட்டாளரான பதும் கேர்னருக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை 30

சமூக ஊடகச் செயற்பாட்டாளர் பதும் கேர்னர் ஓகஸ்ட் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலம் பெறுவதற்காக நேற்று முன்தினம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த அவர், வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13ஆம் திகதி பத்தரமுல்லை பொல்துவ சந்தியில் பொலிஸாரால் இடப்பட்டிருந்த வீதித் தடைகளை உடைத்து, அந்த இடத்தில் இருந்த மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளது.

(அ-ம-22)

## இலங்கையில்...

குறித்த கப்பலின் வருகையை, 'இந்தியாவின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இது' என்று இந்திய வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் ஹரிண்டம் பக்சி தெரிவித்துள்ளார். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய எந்த விடயம் குறித்தும் இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது. அவற்றை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகாரத்துறையின் இந்தக் கருத்துக்கு சீனா உடனடியாகப் பதிலடி கொடுத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி பயணிக்கவுள்ள எமது (சீனாவின்) 'யுவான் வாங் 5' என்ற விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பலின் பயணம் சட்டபூர்வமானது. இந்த விவகாரத்தில் இந்தியா கவலை தெரிவித்ததால், சம்பந்தப்பட்ட தரப்பினர் (இந்தியா) எமது சாதாரண மற்றும் சட்டபூர்வமான கடல்சார் நடவடிக்கைகளில் தலையிடுவதை தவிர்ப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம் என்று சீன வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பின் சீனாவுக்கான கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமை காரணமாக 99 வருட குத்தகைக்கு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் அம்பாந்தோட்டைத் துறைமுகம் வழங்கப்பட்டதால், சீனா தனது கடல்சார் நடவடிக்கைகளை இனி வரும் நாள்களில் இலங்கையில் தீவிரப்படுத்தும். இதனால் இந்தியாவின் எதிர்ப்பை இலங்கை சம்பாதிப்பதுடன் வல்லரசுகளின் மோதலால் இலங்கை பதற்றம் மலிந்த பூமியாக மாறும் என்று நிபுணர்கள் முன்னர் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-ச)

## நல்லூர்...

1. உற்சவகாலத்தில் ஆலயத்தின் சுற்றாடலிலும் ஆலயத்துக்கு வரும் பாதைகளிலும் தாங்கள் உள்ளெடுக்கக் கூடிய குடிதண்ணீர் மற்றும் உணவுப் பொருள்கள் சுகாதாரமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதோடு அது தொடர்பிலான முறைப்பாடுகளை 021 222 2645 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு வழங்க முடியும்.

2. குழந்தைகள், சிறுவர்கள் விரும்பி உண்ணும் இனிப்பு வகைகள், சிற்றுண்டிகள் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு அல்லது விநியோகிக்கப்படும் பட்சத்தில் உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு அவற்றை வாங்கிக் கொடுப்பதைத் தவிர்ப்பதோடு குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

3. அதிகளவான சீனி (சிவப்பு, செம்மஞ்சள் ஒட்டப்பட்ட குடிபானங்கள்) நிறமூட்டிகள், சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உணவுகளை இயன்றளவில் தவிர்த்துப் பிள்ளைகளின் நலனைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

4. வீதியில் பரப்பப்பட்டிருக்கும் மண்ணின் சுகாதாரத்தைப் பேணும் முகமாக ஆலய சுற்றாடலில் வதியும் மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைத் திருவிழா நாள்களில் வீதிக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், ஆலயத்துக்கு வரும் அடியவர்கள், தம்முடன் தமது வளர்ப்பு நாய்களை அழைத்து வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறீர்கள். அறிவுறுத்தல்களை மீறும் பட்சத்தில் அவை கட்டாக்காலி நாய்களாகக் கருதப்பட்டு அப்புறப்படுத்தப்படும் அல்லது பதிவுக் கட்டணத்தின் பிரகாரம் சபையால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் குடியிருப்பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு வழங்கப்படும் பூச்சி மருந்தை நாய்கள் உட்கொள்கின்றனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

5. ஆலயத்தின் சுற்றாடலில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களை எடுத்துவருதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

6. அங்கப்பிரதட்சணம் மற்றும் அடியழித்தல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியவர்களின் நன்மை கருதியும் மண்ணின் சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் ஆலயத்தின் சுற்றாடலில் வெளி வீதித்தடைக்குள் பாதணிகள் அணிந்து செல்வதை முற்றாகத் தவிர்க்குமாறும் கோவில் வீதிகளில் பரப்பப்பட்டுள்ள மணலின் மீதிருந்து உணவுப் பொருள்களை உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் (கச்சான் கோது போடுதல், கார உணவு மீதிகள் படிந்த ரெஜிபோம் மற்றும் பேப்பர், பைகள் போடுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவற்றைக் கழிவுத் தொட்டிகளில் இட்டு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

7. ஆலயச் சூழலில் நடமாடும் போது மக்கள் கழிவுப் பொருள்களை வீச வேண்டிய சந்தர்ப்பங்களில் அவற்றைத் தரம் பிரித்து அதற்கென வைக்கப்பட்டுள்ள கழிவுத் தொட்டிகளில் இடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

8. திருவிழாக் காலங்களில் இயங்கும் தற்காலிக உணவு கையாளும் நிலையமாக அமையும் வியாபார நிலையமானாலும், உணவுகையாளும் நிலையத்தின் அடிப்படைத் தன்மைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், உணவு கையாள்வோர் தற்காலிக அடிப்படையிலேனும் அனுமதிகளை வைத்திருத்தல் அவசியம். இந்த நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும். மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வது தவிர்க்கப்பட முடியாதது. அதனால் நேர காலத்துடன் எமது பணிமனையின் தலைமைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

9. ஆலயச் சுற்றாடலில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் அவற்றில் ஒலிபெருக்கிகளைச் சத்தமாக அலறவிடுவதோ திரைப்படப் பாடல் இசைப்பதையோ தவிர்த்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

10. வீடுகளில் குறித்த தினங்களில் மட்டும் தண்ணீர்ப் பந்தல் மற்றும் அன்னதான நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துபவர்கள் அவற்றைச் சுகாதார நடைமுறைக்கு அமைய நடத்துமாறும் மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

11. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறு சுற்றாடலைப் பேணுவதுடன் திருவிழாவை முன்னிட்டு பிற மாவட்டங்களில் இருந்து தாங்கள் காய்ச்சலுடன் வரும் பட்சத்தில் உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொண்டு காய்ச்சலுக்கு உட்பட்டவரை மருத்துவ பரிசோதனை செய்தல் வேண்டும்.

12. கோவிலுக்கு அண்மித்த சூழலில் வதியும் பொதுமக்கள் உற்சவ காலத்துக்கு முன்பாக தங்கள் வீட்டுக் கிணறுகளை இறைத்தும் நீர்த் தாங்கிகளைச் சுத்தம் செய்தும் வாராந்தம் கிணற்றுக்குக் குளோரின் இடுவதற்கு சுகாதார பகுதியினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறீர்கள்

14. மீண்டும் கொரோனாப் பரவல் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதால் ஆலயத்துக்கு வருபவர்கள், உரிய முறையில் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும், கைகளை அடிக்கடி சவர்க்காரம் பாவித்து கழுவுதல் வேண்டும், இயன்றளவு சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும், தடிமன், காய்ச்சல், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் ஆலயத்துக்கு வருகை தருவதை தவிர்த்து கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## நாணய...

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளை குறைத்து நல்லதொரு பொருளாதார நடைமுறையை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் முக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் முன்னேற்றத்தை அடைவதற்கு, கடன் நிலைத்தன்மை குறித்த முறையான திட்டம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். கடந்த கால அரசியல் உறுதியற்ற நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படாத முன்னைய அரசாங்கத்தின் அரசியல் கொள்கையினால் இது தடைப்பட்டது.

எனினும், ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையில் அனைத்துக் கட்சி ஆட்சிக்கான அரசியல் பேச்சுக்கள் தற்போது மிகவும் வெற்றிகரமான மட்டத்தில் உள்ளன. இதனால், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களை வெற்றிகரமாக முடித்து, நிதி உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்கு தேவையான முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி, முட்டை உற்பத்தி 2023 இல் வீழ்ச்சியடையும்

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதிக் குழு எச்சரிக்கை

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் நாட்டில் கோழி மற்றும் முட்டை உற்பத்திகள் முற்றாக வீழ்ச்சியடையும். இதனால் அடுத்த ஆண்டில் இலங்கை பெரும் போஷாக்குப் பற்றாக்குறையை எதிர் கொள்ள நேரிடும் என்று உணவுப் பாது காப்பு தொடர்பான ஜனாதிபதிக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது திரவப் பால் உற்பத்தி 19.8 சதவீதமும், கோழி உற்பத்தி 12.1 சதவீதமும், கோழி முட்டை உற்பத்தி 34.9 சதவீதமும் குறைந் துள்ளதாக ஆணைக்குழு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த நிலை நீடித்தால் அடுத்த ஆண்டு கோழி மற்றும் முட்டை உற்பத்தித் துறைகள் முற்றாக வீழ்ச்சியடையும்.

எனவே நாட்டின் உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என உணவுப் பாதுகாப்பு ஜனாதிபதிக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. எனினும் இந்த எச்சரிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் உறுதித் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (ஓ-14,இ)

தவறிவிட்டது
யாழ்.கொக்குவில் பெற்றோல் நிலையத்தில் நேற்று (29.07.2022) Documents (NIC, Driving Licence, Insurance, Tax, ஒரு தொகைப் பணம்) அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
(NIC - 803375733V - இளங்கீரன் )
077 760 6006

வீடு விற்பனைக்கு
ஊரெழு பிள்ளையார் கோயில் கணேசா பாடசாலை அருகில் 12 பரப்பு காணியில் நவீன வசதிகளுடன் கூடிய மேல் மாடி வீடும், முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட மற்றும் ஒரு வீடும் பயன் தரு மரங்கள் (20 தென்னை, 20 கமுகு, பிலா, 5 மாமரம், மரவள்ளி, வாழை) விற்பனைக்குண்டு.
விலை :- 46 மில்லியன்
077 08 21010, 077 441 0919

வீடியோ & போட்டோ
நேரடி ஒளிபரப்பு
உங்கள் மகிழ்வான தருணங்களை அழகிய படைப்புகளாக உடனுக்குடன் பெற்றிட அழையுங்கள்!
செந்தமிழன் STUDIO
077 6405572

வேலைவாய்ப்பு
இல.46 பிரவுண் வீதி (Brown Road) யாழ்ப்பாணத்தில் (கலட்டி சந்திக்கு அருகாமையில் ) இயங்கும் மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.
A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.
077 263 9573

## வடக்கு மாகாணத்தில் நாளைய (31.07.2022) எரிபொருள் விநியோக விவரம்

### பெற்றோல் விநியோக இடங்கள்

பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச., கே.தேவகுருநாதன்,அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.ச. ,யாழ்ப்பாணம் ப.நோ.கூ.ச.,சங்கானை ப.நோ.கூ.ச.,சிறுப்பிட்டி என்.விஸ்வலிங்கம், அச்சுவேலி வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.ச.,யாழ்ப்பாணம் மாக்பெட் நிறுவனம் ,வேலணை ப.நோ.கூ.ச.,மந்திகை யோகேஸ்வரி சின்னையா, கிளிநொச்சி பி.தம்பிப்பிள்ளை, கிளிநொச்சி கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச., பளை எம்.கனகரட்ணம், மன்னார் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாந்தை தெற்கு ப.நோ.கூ.ச., நானாட்டான் ப.நோ.கூ.ச., எம்.ஜே.எம்.அஸ்லம் , வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூ.ச., ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டு ப.நோ.கூ.ச.,முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப.நோ.கூ.ச.,வவுனியா சி.பரமநாதன், செட்டிக்குளம் வெங்கல செட்டிகுளம் ப.நோ.கூ.ச., கனகராயன்குளம் கே.யோகராஜா, நெடுங்கேணி என்.சாந்தரட்ணம்

### டீசல் விநியோக இடங்கள்

தெல்லிப்பழை ப.நோ.கூ.ச., உரும்பிராய் ஜே.நடராஜா, புன்னாலைக்கட்டுவன் சி.வேதநாயகி,வல்வெட்டித்துறை பருத்தித்துறை ப.நோ.கூ.ச., கோப்பாய் வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.ச., ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச., குருநகர் மீனவர் சங்கம், கைதடி கே.எஸ். பொன்னம்பலம் அன்சன்ஸ், யாழ்ப்பாணம் முருகேசு குணரட்ணம், கொக்குவில் கே.ஜெயப்பிரணவன்,சண்டிலிப்பாய் தர்சினி கண்ணதாசன்,இயக்கச்சி ஆழ்வாப்பிள்ளை சாந்தரூபன், சிறுத்தோப்பு மன்னார் ப.நோ.கூ.ச., தலைமன்னார் பியர் எம்.எஸ்.என்ரபிறைசஸ்,மாங்குளம் வவுனியா வடக்கு ப.நோ.கூ.ச.,சுண்டிக்குளம் கே.எம்.லியகாத் அலி, ஓமந்தை வவுனியா. பநோ.கூ.ச.

## 75 பணியாளர்களுக்கு உலருணவுப்பொதிகள்

*சாவகச்சேரி, ஜூலை 30*

*சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் 75 பணியாளர்களுக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள், சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று வழங்கப்பட்டன.*

*நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர் நாட்டிலுள்ள ஞானானந்தா குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.* (ஓ-14,9)

## மரண அறிவித்தல்

### சிவகுமார் இராஜதர்சினி (தங்கக்கட்டி)

**தோற்றம் : 24.01.1978** **மறைவு : 28.07.2022**



நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கக்கட்டி என அன்பாக அழைக்கப்படும் சிவகுமார் இராஜதர்சினி அவர்கள் கடந்த (28.07.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் ஞானமலர் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவகணேஸ் ஜெயராணி தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னான் என அன்பாக அழைக்கப்படும் சிவகுமாரின் பாசமிகு மனைவியும், டிலுக்ஷன், விதுஷிகா, கனிஷிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், றதீசின் பாசமிகு சகோதரியும், சறோஜா, சாந்தினி, ஜெயக்குமார், தயாளினி, அனுஜா, குகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், விஷ்மிகா, கபிஸ்ரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நடேசு மற்றும் கமலாதேவி, இராசேந்திரம், பாக்கியநாயகி ஆகியோரின் மருமகளும், ரூபன், விக்டர், குமாரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆஸ்பத்திரி முன்வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20132 )1-6

TECHNO WORLD
தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
A/L 2022 DAY CLASS
(இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)
● திகதி - 01.08.2022 (திங்கட்கிழமை)
● நேரம் - 8.00 AM
தொடர்புகளுக்கு - 077 017 5346

காணி விற்பனைக்கு
யாழ் நாவற்குழியில் 60 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.